


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | அக்டோபர் 26, 2017 | புரட்சி 16 | முழக்கம் 41 | விலை: ரூ.3.00


# ஜாதியமைப்பை ஒழிக்காமல் ‘தூய்மை பாரதம்’ பேசுவது மோசடியே!

மோடியின் தூய்மை இந்தியா திட்டம் வெற்று முழக்கமாக நிற்கிறது. உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. உண்மையில் தூய்மை இந்தியா ஒன்றை உருவாக்க வேண்டுமானால் அடிப்படையாக செய்யப்பட வேண்டியது என்ன? ஜாதிக்கும் ஜாதி அடிப்படையிலேயே பார்ப்பனிய சமூகக் கட்டமைப்பு உறுதி செய்திருக்கும் ஜாதிக்கும் தொழிலுக்கும் இடையிலான உறவு துண்டிக்கப்பட வேண்டும். ஜாதிக்கொரு தொழிலை தர்மமாக்கிக் கொண்டிருக்கிற பார்ப்பன இந்தியாவில் ஒரு போதும் ‘தூய்மை இந்தியா’ உருவாகவே முடியாது. இந்தக் கருத்தைக் கூறியிருப்பவர் - கையில் மலம் எடுக்கும் துப்புறவுத் தொழிலாளர்களின் விடுதலைக்கான ‘சஃபாய்கரம் சாரி அந்தோலன்’ அமைப்பின் நிறுவனர் பெஸ்வாடா வில்சன். உலகின் தலைசிறந்த ‘மகாசாய் விருதை’ 2016ஆம் ஆண்டில் பெற்றவர். செப். 29, ஆங்கில ‘இந்து’ நாளேட்டில் அவர் எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கமான தமிழ் வடிவம்.

தூய்மை இந்தியாவுக்கான ‘சுவாச் பாரத்’ திட்டத்தை மோடி அறிவித்து 3 ஆண்டுகளுக்குப் பிறகும், நாட்டில், தெருக்களை சுத்தப்படுத்தி, கழிப்பிடங்களை சுத்தப்படுத்தும் ஜாதிப் பிரிவினர் பற்றி எவருமே கவலைப்படவில்லை. இவர்களின் பங்களிப்பு இல்லாமலேயே ‘தூய்மை பாரதத்தை’ உருவாக்கிவிடலாம் என்று மோடி கனவில் மிதக்கிறார். வாழ்க்கை முழுதும் கைகளில் துடைப்பங்களை ஏந்திக் கொண்டு வீதிகளை சுத்தம் செய்கிறவர்களுக்கு மறு வாழ்க்கையை உறுதியாக்காத வரை - தூய்மை இந்தியா உருவாகாது. ஆண்டுக்கு ஒரு நாள் காமிராக்கள் முன் வந்து, துடைப்பத்தை கரங்களில் பிடித்து ‘போஸ்’ கொடுத்துவிட்டு தலைவர்கள் போய் விடுவாவர்கள். 364 நாட்களும் உண்மையில் துடைப்பங்களை ஏந்த வேண்டியவர்கள் இந்தத் தொழிலாளர்கள் தான். ‘கடவுளுக்கு அடுத்த நிலையில் வைக்கப்பட வேண்டியது தூய்மை’ என்று பேசுவதால், எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடப்போவது இல்லை. சுத்தப்படுத்தும் வேலையை ஒருகுறிப்பிட்ட ஜாதியின் மீது சுமத்திவிட்டீர்கள்; அப்படி ஒரு ஜாதிக்குரிய வேலையாக மட்டும் இருக்கின்ற காரணத்தால்தான், 4000 ஆண்டுகளாக ஒரே ஜாதி, இந்த வேலையை செய்து கொண்டிருக்கின்றது. அனைத்து ஜாதியினருக்குமான வேலையாக இது இருந்திருக்குமானால் எப்போதோ இந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கும். உண்மையிலே ‘தூய்மை பாரதத்தை’ உருவாக்கும் நோக்கம் மோடிக்கு இருந்திருக்குமானால் இந்தப் பிரச்சினையின் ஆணி வேர் ஜாதி அமைப்புதான். எனவே ஜாதி அமைப்பு ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று மோடி வெளிப்படையாக அறிவித்திருக்க வேண்டும்.

கையில் மலம் எடுப்பதும், சாக்கடை குழிக்குள் இறங்கி சுத்தப்படுத்துவதும் புனிதமான தொழில் என்று அதற்கு பெருமை சேர்க்கிறார்கள். இந்தியாவின் ஜாதிய சமூக அமைப்பில் இது புனிதமானதுதானா? மனிதர்களுடைய மலத்தை எடுக்கும் ஒரு தொழிலாளி, தன்னுடைய தொழிலை, வணங்கக்கூடிய புனிதத் தொழில் என்று கருதுவாரா?

‘கழிப்பறை கட்டுங்கள்’ என்று அரசு பிரச்சாரம் செய்கிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி கழிப்பறை இல்லாத கிராமங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார்கள். கழிப்பறையை கட்டி விட்டால் மட்டும் போதுமா? கழிவுகளை சேமிக்கும் ‘செப்டிக் டேங்க்’கை யார் கட்டுவது? இந்தக் கழிவுத் தொட்டிகளைக் கட்டுவதற்கு - அதை நவீனப்படுத்துவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டாமா? கழிப்பறை கட்டிய பிறகு இந்தக் ‘கழிவுத் தொட்டி’களை சுத்தப்படுத்துவதற்கு அதே ஜாதிக்காரர்கள் தானே வர வேண்டியிருக்கிறது? உள்ளே இறங்கியவர்கள் நச்சுக் காற்றில் சிக்கி மரணிக்கிறார்களே!

சொல்லப்போனால், கழிப்பறை இல்லாததை விட, கழிப்பறை கட்டிய பிறகு, மேலும் பிரச்சினைகள் கூடுதலாகி விடுகின்றன. சாக்கடைக் குழிகளில் மனிதர்களை இறக்கி விடாமல் நவீன எந்திரங்களைப் பயன்படுத்துவதற்கும், அதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கும் ‘தூய்மை பாரதம்’ பேசுவோர் ஏன் முன்வரவில்லை?

‘தூய்மை பாரதம்’ திட்டத்தை தங்கள் இலக்காக அறிவிக்கிற மோடி, அந்த இலக்கை எட்டுவதற்கான அடிப்படைப் பிரச்சினைகளையே ஆய்வுக்கு உட்படுத்தாமல், வெற்று முழக்கமாக்கி விட்டால் மட்டும் ‘தூய்மை பாரதம்’ வந்து விடுமா?” என்று எழுதியுள்ளார், கையால் மலம் எடுக்கும் தொழிலாளர்கள் விடுதலைக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட வில்சன்.

பார்ப்பனர்கள் நடத்தும் வைதிகச் சடங்குகளால் குப்பைகளும் சுற்றுப்புறச் சூழல்களும் மோசமாக பாதிக்கப்பட்டு வருகின்றன. மயிலாடுதுறையில் ‘மகாபுஷ்கரம்’ நடத்திய காஞ்சிபுரம் ‘கிரிமினல்’ பார்ப்பனர் ஜெயேந்திரன் ஊரையே குப்பையாக்கிவிட்டார். காவிரியில் ‘பாவமுழுக்குப்’ போட வந்த ‘பக்த கோடிகள்’ உடுத்திய ஆடைகளை அதே தண்ணீரில் அப்படியே போட்டுவிட்டு கிளம்பி விட்டனர். இது அய்தீகமாம்! இந்த அழுக்கு குப்பைகளை எடுக்க, அதே துப்புரவு தொழிலாளர்கள் தான் மீண்டும் ஆற்றுக்குள் இறக்கி விடப்படுவார்கள்.

‘தூய்மை பாரதம்’ என்று காது கிழிய கூச்சல் போடும் மோடி வகையறாக்கள், இந்த ‘மகாபுஷ்கரங்கள்’ வேண்டாம் என்று கூற முன் வருவார்களா? ஒரு போதும் வர மாட்டார்கள்.

அதேபோல் கங்கையாற்றில் பார்ப்பனர் திணித்த சடங்குகளை மக்கள் இப்போதும் நம்பிக் கொண்டு பிணங்களை பாதி எறிந்த நிலையில் வீசினால் ‘சொர்க்கம்’ போகும் என்று நம்புகிறார்கள். கங்கையை சுற்றி பார்ப்பனர்கள் நடத்தும் வேத சடங்குகள் அதில் எரிக்கப்படும் பொருள்கள் கங்கையில் வீசுவது ‘புண்ணியம்’ என்று நம்புகிறார்கள்.

இது குறித்து விரிவான கட்டுரையை வெளியிட்டுள்ள ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு மக்களிடம் இந்த சடங்குகள் பற்றிய மூட நம்பிக்கைகளை விளக்கி பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்யப்பட வேண்டும் என்றும், இந்தச் சடங்குகள் மீதான நம்பிக்கைகள் இருக்கும் வரை கங்கையை எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் கொட்டினாலும் தூய்மைப் படுத்த முடியாது என்றும் எழுதியிருக்கிறது.

இவற்றையெல்லாம் செய்யாமல் ‘தூய்மை இந்தியா’வை பேசுவது மோசடி தானே!

## தமிழக அரசே!
## பயிற்சி பெற்று காத்திருக்கும் 206 அர்ச்சகர்களையும் அறநிலையத் துறை கோவில்களில் உடனே பணியமர்த்து!

தோழமை இயக்கங்களின் ஆதரவோடு -
தமிழ்நாடு அரசு,

**தலைமைச் செயலகம் - முற்றுகை போராட்டம்!**

தலைமை : கொளத்தூர் மணி
கழகத் தலைவர்
திராவிடர் விடுதலைக் கழகம்

நாள் : அக்டோபர் 30, 2017 - காலை 10 மணி

**செய்து விட்டது கேரளம்! அறிவித்து விட்டது கர்நாடகம்!**

## விதைத்த தமிழகம் சோம்பிக் கிடப்பதா?

## தோழர்களே, அணி திரள்வீர்!

- திராவிடர் விடுதலைக் கழகம்
சென்னை மாவட்டம்

**தலையங்கம்**

## ஜப்பான் முன்னாள் பிரதமர் எச்சரிக்கிறார்

அரசுகளின் ‘வளர்ச்சித் திட்டங்கள்’ மக்கள் முன்னேற்றத்துக்கு அவர்களின் மேம்பாட்டுக்கு எந்த வகையில் உதவுகின்றன என்பது இப்போது விவாதத்திற்குள்ளாகி இருக்கிறது. 1990இல் ‘உலக மயமாக்கல்’ என்ற கோட்பாட்டின் கீழ் உலக வர்த்தக நிறுவனத்துடன் இந்திய பார்ப்பன ஆட்சி உடன்பாடு செய்து கொள்வதற்கு முன் கொண்டு வரப்பட்ட வளர்ச்சித் திட்டங்களினால் மக்கள் பயன் பெற்றார்கள் என்பது உண்மை. பொதுத் துறை நிறுவனங்கள் வழியாக வேலை வாய்ப்புகள் பொருளியல் வளர்ச்சிகள் வந்தன. ஆனால் உலக மயமாக்கல் கொள்கைக்குப் பிறகு மக்கள் நலன் பின்னுக்குத் தள்ளப்பட்டு பன்னாட்டு நிறுவனங் களின் சுரண்டல்களுக்கு முன்னுரிமை தரப்படும் நிலை உருவானது. உள்ளூர் சிறு, குறு தொழில்கள் முற்றிலும் நசுக்கப்பட்டு விவசாயத் துறை வஞ்சிக்கப் பட்டு இயற்கை வளங்களை சூறையாடி மக்களின் வாழ்வாதாரங்களை நசுக்குவதே அதன் நோக்கமாகி விட்டன. எனவே வளர்ச்சித் திட்டங்கள் மக்களின் வாழ்வதாரத்துக்கும் வேலை வாய்ப்புக்கும் அந்த மாநில மக்களின் வளர்ச்சிக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும்.

உலகின் பல்வேறு நாடுகள் அணுமின் திட்டங்களின் ஆபத்துகளை உணர்ந்து அவற்றை கைவிடும் நிலையில் இந்தியாவிலேயே குஜராத், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் எதிர்த்த அணுமின் திட்டங்களை தமிழ்நாட்டில் கூடங்குளத்தில் மக்கள் எதிர்ப்பையும் மீறி திணித்து வருகிறார்கள். அணு மின்சாரத் துறையை தனது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்துள்ள பார்ப்பன அதிகார வர்க்கம் மக்களின் ஆபத்துகளையும் அவர்களின் நியாயமான அச்ச உணர்வுகளையும் துச்சமென மதிக்கிறது. கூடங்குளத்தில் ஒரு இலட்சத்து அய்ம்பதாயிரம் கோடி செலவில் நான்கு அணு உலைகளை நிறுவி(வ)யிருக்கிறார்கள். அணு உலைப் பூங்காவாகவே மாற்றப்பட்டுள்ள கூடங் குளத்தில் இவ்வளவு பெரிய முதலீட்டுக்குப் பிறகு பெறப்போகும் மின்சாரத்தின் அளவுகூட 6000 மெகாவாட் என்றே கூறப்படுகிறது. ஒரு மெகாவாட் அணுமின்சார உற்பத்திக்கான செலவு ரூ.37.50 கோடி. ஆனால் சூரிய ஒளி வழியாக தயாரிக்கப்படும் ஒரு மெகாவாட் மின்சாரத்துக்கான உற்பத்தி செலவு ரூ.5 கோடி மட்டும் தான். கடந்த 5 ஆண்டுகளில் காற்றாலை மற்றும் சூரிய ஒளிக்கதிர் வழியாக நாம் பெற்ற மின்சாரத்தின் அளவு 24,503 மெகாவாட்டி லிருந்து 57,260 மெகாவாட்டாக உயர்ந்து மொத்த மின்உற்பத்தி அளவில் 17.51 விழுக்காட்டை எட்டியுள்ளது.

கிளி நொச்சியை தலைமையகமாகக் கொண்டு விடுதலைப் புலிகள் நடத்திய ஆட்சியில் சூரிய ஒளி மின்சாரத்தையே முழுமையாக தமது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துப் பகுதியிலும் மக்களுக்கு வழங்கினார்கள். சூரிய ஒளி, காற்றாலை மின்சாரத் திட்டங்களை ஊக்குவிக்காமல், எந்த நேரத்திலும் ஆபத்துகளை உருவாக்கும் அணுமின் நிலையங் களை நோக்கியே பார்ப்பன அதிகாரவர்க்கம் ஆட்சிகளை செயல்பட வைக்கிறது. இதை எதிர்த்துப் போராடுகிறவர்களை தேச விரோதிகள் என்கிறார்கள்.

‘அணுஉலை ஆபத்தானது’ என்று எதிர்த்தாலே தேச விரோதிகள் என்று கூறும் பார்ப்பன – இந்திய அதிகாரவர்க்கத்துக்கு பதிலளிக்கும் வகையில் ஜப்பான் நாட்டின் முன்னாள் பிரதமர் நவோயாகான், “அணுஉலை அமைத்து விட்டால் விபத்து நடந்தே தீரும்” என்று பேட்டி அளித்திருக் கிறார். அவரது பேட்டியை ‘ஜூனியர் விகடன்’ (8.10.2017) வெளியிட்டிருக்கிறது. “பாதுகாப்பான அணுஉலை என்று ஒன்று இல்லவே இல்லை. அணு சக்தியை சார்ந்திருப்பது; அதை முன்னெடுப்பதி லிருந்து இந்தியா விலகி நிற்க வேண்டும்” என்று கூறியுள்ள ஜப்பான் முன்னாள் பிரதமர், “இந்தியாவுக்கு வரும் வாய்ப்பு கிடைத்தால் அணுமின் நிலையம் அமைக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங் களில் வசிக்கும் மக்களையும், அணு உலைக்கு எதிராகப் போராடுபவர்களையும் சந்திக்க விரும்பு கிறோம்” என்று கூறியுள்ளதோடு, “காற்றாலை மற்றும் சூரிய ஒளி மூலம்தான் மின் உற்பத்தி நடக்க வேண்டும்” என்றும் கூறியுள்ளார்.

“ஃபுகுஷிமா விபத்துக்குப் பிறகு ஜப்பானில் அணு உலைகளின் செயல்பாடுகள் முற்றிலும் நிறுத்தப் பட்டன. அப்போது மின்பற்றாக்குறை ஏற்படும் என்று மின் உற்பத்தி நிலையங்கள் கூறின. ஆனால் அப்படிப் பற்றாக்குறை ஏதும் ஏற்படவில்லை. எனவே ஜப்பானுக்கு அணுமின் உற்பத்தியே தேவை இல்லை; மறுபடியும் அவற்றை இயக்குவதன் மூலம் ஜப்பான் தவறு செய்கிறது” என்று அவர் தெளிவாக கூறியிருக்கிறார். ஜப்பான் மீண்டும் அணுமின் நிலையங்களை தொடங்கி விட்டது என்று கூடங்குளம் திட்டங்களை நியாயப்படுத்தும். இந்திய – பார்ப்பன அதிகாரவர்க்கம் ஜப்பான் முன்னாள் பிரதமரின் இந்தக் கருத்துக்கு என்ன பதிலை கூறப் போகின்றன?

இவரையும் ‘ஜப்பான் தேசத்தின் விரோதி’ என்று முத்திரை குத்துவார்களா?

# ‘அதானியே வெளியேறு’; ஆஸ்திரேலிய சுற்றுச் சூழல் அமைப்புகள் போர்க் கொடி

பிரதமர் நரேந்திர மோடியின் நண்பரும், அவரது ஆதரவுடன் குறுகிய காலத்திலேயே நாட்டின் பெரும்பணக்காரராக உருவெடுத்து இருப்பவருமான கௌதம் அதானியின், ஆஸ்திரேலிய நிலக்கரிச் சுரங்கத்திற்கு எதிராக அந்நாட்டு மக்கள் போராட்டக் களத்தில் இறங்கியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் நியூ சவூத் வேல்ஸ் மாகாணத்திலுள்ள போண்டி கடற்கரை, சிட்னி, பிரிஸ்பேன், மெல்போர்ன், கோல்ட் கோஸ்ட் ஆகிய நகரங்களில் சுமார் 40 இடங்களில் ஆயிரக்கணக்கில் திரண்ட அந்நாட்டு மக்கள், STOP ADANI, ADANI GO HOME (அதானியே நிறுத்து ; உன் நாட்டிற்கே திரும்பு) என்ற பதாகைகளை உயர்த்தியும், முழக்கங்களை எழுப்பியும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

குஜராத்தை தலைமையகமாக கொண்ட அதானி நிறுவனம், ஆஸ்திரேலியாவில் ஒரு புதிய நிலக்கரி சுரங்கம் அமைக்க உள்ளது. மோடியின் ஆசியுடன், பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரூ.6 ஆயிரம் கோடி ரூபாயை கடனாகப் பெற்ற அதானி, கடந்தாண்டு மோடி ஆஸ்திரேலியா சென்றபோது, கூடவே சென்று நிலக்கரி சுரங்கத்தை ஏலத்தில் எடுத்தார்.

16.5 பில்லியன் டாலர்கள் மதிப்பிலான இந்த நிலக்கரிச் சுரங்க திட்டத்தை செயல்படுத்தினால், அது நாட்டின் சுற்றுச்சூழலை கடுமையாக பாதிக்கும் என்று அப்போதே எதிர்ப்புகள் எழுந்தன. குயின்ஸ்லாந்து மாகாணத்தின் கார்மைக்கல் என்ற பகுதியில்தான் அதானியின் நிலக்கரி சுரங்கம் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

ஆஸ்திரேலியாவின் கிரேட் பேரியார் ரீப் என்ற பவளப் பாறைகள் நிறைந்த இந்த பகுதி, உலகிலேயே மிகவும் ரசிக்கப்படும் ஒரு சுற்றுலாத் தலமாகும். அண்மைக்காலமாக இந்த பகுதியில் வாழும் உயிரினங்கள் அழிந்து வருவதாகவும், பல கடல்வாழ் உயிரினங்கள் மிகவும் ஆபத்தான நிலையில் இருப்ப தாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், கார்மைக்கல் பகுதியில் அதானியின் நிலக்கரித் திட்டத்தை செயல்படுத்தினால், கடல் மேலும் மாசுபடுத்தப்பட்டு, சுற்றுச்சூழல் கேள்விக் குள்ளாகும், கடல்வாழ் உயிரினங்கள் பேரழிவைச் சந்திக்கும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனடிப்படையில் அதானி நிறுவனத்திற்கான சுற்றுச்சூழல் துறை அனுமதி கடந்த ஓராண்டாக தாமதமாகி வந்தது. திட்டம் தாமதமானதால் போராட்டங்கள் பெரியளவில் எழவில்லை.

ஆனால், அதானியின் திட்டத்திற்கு சுமார் ரூ.6,500 கோடி மதிப்பில் கடன் வழங்கப் போவதாக ஆஸ்திரேலிய அரசு அண்மையில் அறிவித்தது, அந்நாட்டு மக்களை கொதிப்படையச் செய்தது. தங்களின் எதிர்ப்பையும் மீறி அதானி நிறுவனத்திற்கு சுரங்கத்தை ஒதுக்குவதா? என்று ஆவேசம் அடைந்தனர்.

“பொதுமக்களின் வரிப்பணத்தை வைத்து, அதானியின் திட்டத்திற்கு நிதியுதவி எதுவும் அளிக்க மாட்டோம்” என்று குயின்ஸ் லாந்து மாகாணத் தலைவராக உள்ள அனஸ்டாஸியா பலஸ்சூக் முன்பு உறுதியளித்திருந்தார்.

அதன்படி அதானிக்கு ஆஸ்திரேலிய அரசு வழங்கவுள்ள கடனை, தனது அதிகாரத்தை பயன்படுத்தி ரத்து செய்ய வேண்டும் என்றும், திட்டத்தையே தடை செய்ய வேண்டும் என்றும் குயின்ஸ்லாந்து மக்கள் பலஸ்சூக்கிடம் கோரிக்கை விடுத்தனர். மேலும், STOP ADANI, ADANI GO HOME என்ற பெயரில் 30 சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் ஒன்றாக இணைந்து அதானிக்கு எதிராக போராட்டத்திலும் இறங்கின.

அந்த வகையில், ஆஸ்திரேலியாவின் நியூ சவூத் வேல்ஸ் மாகாணத்திலுள்ள போண்டி கடற்கரை, சிட்னி, பிரிஸ்பேன், மெல்போர்ன், கோல்ட் கோஸ்ட் ஆகிய நகரங்களில் சுமார் 40 இடங்களில் நடந்த போராட்டங்களில் அதானி நிறுவனத்திற்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். இவர்கள் பொதுமக்களுடன் இணைந்து, STOP ADANI என்ற வடிவத்தில் மனித சங்கிலியையும் உருவாக்கினர்.

இப்போராட்டம் வரும் காலத்தில் மேலும் வலுவடையலாம் என்று கூறப்படுகிறது. ஏனெனில், அண்மையில் ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில், அந்நாட்டு மக்கள் சுமார் 70 சதவிகிதம் பேர் அதானியின் திட்டத்தை எதிர்ப்பதாக தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டைச் சூறையாடி வரும் அதானி, தனது தொழிலை ஆஸ்திரேலியாவுக்கும் விரிவுபடுத்திய நிலையில், அந்நாட்டு மக்கள் தங்களின் இயற்கை வளத்தை அதானிக்கு காவு கொடுக்க மாட்டோம் என்ற உறுதிப்பாட்டுடன் போராட்டக்களத்தில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், ஆஸ்திரேலியாவில் வேலை வாய்ப்புகளை உருவாக்க அந்நாட்டுக்கு உறுதியளித்து உள்ளதாகவும், ஆஸ்திரேலிய பிராந்தியத்தில் இந்த திட்டத்திற்கு பெரும் ஆதரவு இருப்பதாகவும் அதானி நிறுவனத்தின் ஆஸ்திரேலிய தலைமை நிர்வாக அதிகாரி ஜெயகுமார் ஜனகராஜ் தெரிவித்துள்ளார்.

# அரசுத் துறைகளைப் பயன்படுத்தி அமித் ஷா மகன் ஊழல்

ஊழலை ஒழிப்பதற்கே இரவு பகலாக பிரதமர் நரேந்திர மோடி பாடுபடுகிறார் என்று பாஜக-வினர் பிரச்சாரம் செய்துகொண்டே இருக்கிறார்கள். பாஜக தலைவர் அமித் ஷாவின் மகனும் தொழிலதிபருமான ஜெய் அமித் ஷா ஒரு மிகப்பெரிய ஊழலில் நீந்திக் கொண்டிருக்கக் கூடும் என்ற, தொழில் துறை யினரையும் அசர வைக்கிற செய்தி இப்போது வெளி வந்திருக்கிறது.

இணையதள ஏடாகிய ‘தி ஒயர்’ ஞாயிறன்று (அக்.8) வெளியிட்டுள்ள அந்தச் செய்தி எந்த அளவுக்கு அதிகார பலம் சுயநல நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. நரேந்திர மோடி பிரதமரான பிறகு, பாஜக தலைவராக அமித் ஷா பதவியேற்ற பிறகு, இந்த மூன்று ஆண்டுகளில் அவரது மகன் ஜெய் அமித் ஷாவின் நிறுவன வணிக விற்று வரவு 16,000 மடங்கு எகிறியிருப்பதாக அந்தச் செய்தி தெரிவிக்கிறது. இந்தச் செய்தியை வெளியிட்டால் கடுமையான சட்ட நடவடிக்கைகளைச் சந்திக்க நேரிடும் என்ற ஜெய் அமித்ஷாவின் வழக்குரைஞரின் மிரட்டலை மீறி வெளியிடப்பட்டுள்ள அந்தச் செய்தியின் சுருக்கம் வருமாறு:

ஜெய் அமித் ஷா நடத்தி வரும் நிறுவனத்தின் பெயர் டெம்பிள் எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட். நிறுவனங்கள் பதிவாளர் அலுவலக (ஆர்ஓசி) ஆவணங்களின்படி, 2012-2013 நிதியாண்டில் அந்த நிறுவனம் ரூ.6,230 இழப்பைச் சந்தித்தது. அதற்கடுத்த நிதியாண்டில் ஏற்பட்ட இழப்பு ரூ.1,724.2014-15 நிதியாண்டில் அந்த நிறுவனம் ஈட்டிய வணிக வருவாய் வெறும் 50,000 ரூபாய். அதில் லாபம் வெறும் 18,728 ரூபாய். அதற்குப் பிறகு, 2015-16 நிதியாண்டில், அதன் வணிக வருவாய் 80கோடியே 50 லட்சம் ரூபாய்! ரிலையன்ஸ் நிறுவன உயர் நிலை நிர்வாகியும், மாநிலங்களவை உறுப்பினர் பரிமள் நத்வானியின் சம்பந்தியுமான ராஜேஷ் காண்ட்வலா நடத்துகிற நிதி நிறுவனம், உறுதிப்பத்திரம் இல்லாமல் அளித்த ரூ.15.80 கோடி திடீர்க்கடன் உட்பட, பல நிறுவனங்கள் “நிதியுதவி” செய்துள்ளன. அவ்வாறு தாராளமாகக் கடன் வழங்கிய ஒரு நிறுவனம், இந்திய புதுப்பிக்கத்தக்க விசை மேம்பாட்டு நிறுவனம். ஆம், இது ஒரு பொதுத்துறை நிறுவனம். இந்த நிறுவனம் ஜெய்க்குக் கடன் வழங்கியபோது, அந்தத் துறையின் அமைச்சராக இருந்தவர் இன்றைய ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல்.

வேறு சில நிறுவனங்கள் நிதி அளித்தது உள்பட, இத்தகைய பல திடுக்கிடும் தகவல்களை ‘தி ஒயர்’ ஏடு வெளியிட்டிருக்கிறது. இதில் ஒரு ‘கிளைமாக்ஸ்’ திருப்பம் என்னவென்றால், சென்ற ஆண்டு, டெம்பிள் எண்டர்பிரைசஸ் நிறுவனம் தனது வர்த்தகத்தை நிறுத்திக்கொண்டதாக அறிவித்தது! தொடர்ந்து ஏற்பட்ட இழப்புகளைக் காரணமாகக் கூறியிருக்கிறது அந்த நிறுவனம். அரசியலில் புயலைக் கிளப்பக்கூடிய இந்தத் தகவல்கள் பற்றி, ‘தி ஒயர்’ சார்பில் ஜெய் அமித் ஷாவைத் தொடர்பு கொண்டபோது, தாம் பயணத்தில் இருப்பதாகக் கூறி பதிலளிக்க அவர் மறுத்துவிட்டாராம். ஆனால், அவரது வழக்குரைஞர் தொடர்பு கொண்டு சில ஆவணங்களை அனுப்பியதோடு, தனது கட்சிக்காரர் மேல் அவதூறு செய்யக்கூடிய செய்தியை வெளி யிட்டால் கிரிமினல் மற்றும் சிவில் சட்டங்களின் கீழ் வழக்குத் தொடரப்படும் என்று எச்சரித்தாராம்.

# குண்டர் சட்டத்தில் கைதான வளர்மதி வீர உரை

# அடக்குமுறை சட்டங்களால் எங்கள் இலட்சியத்தை ஒழித்து விட முடியாது!

*நெடுவாசல் மற்றும் கதிராமங்கலம் கிராமங்களில் ஓ.என்.ஜி.சி. எரிவாயு எடுத்து நிலத்தையும் நீரையும் பாழ்படுத்துவதை எதிர்த்துப் போராடும் மக்களுக்காக துண்டறிக்கை வழங்கியதற்காக கைது செய்யப் பட்டவர் வளர்மதி. சென்னையில் ஜாதி ஒழிப்புக்கான பெண் போராளிகள் அறைகூவல் நிகழ்வில் பங்கேற்று தனது உரையில் குறிப்பிட்டதாவது:*

பெண் போராளிகளின் அறைகூவல் என்று இந்த கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. பெண் போராளிகள் யார்? அவர்களும் இந்த சமூகத்தி லிருந்து வந்தவர்களே. குடும்ப - ஜாதி கட்டமைப்புக்குள் 'அடங்கிப் போ; பணிந்து வாழ்; அதுவே பெண்ணிற்குப் பெருமை' என்கிற சூழலில் வளர்ந்த பெண்கள் அதை உடைத்துக் கொண்டு எப்படி வெளியே வந்தார்கள்? இந்தப் போராளிப் பெண்களுக்கு உரிமைகளை எவரும் கொடுத்துப் பெறவில்லை அவர்களாகவே தங்கள் உரிமைகளை எடுத்துக் கொண்டு வெளியே வந்தவர்கள். 'நான் எனது மகளுக்கு எனது மனைவிக்கு எல்லா உரிமைகளை யும் வழங்கியிருக்கிறேன்' என்று கூறுகிறவர்கள் இருக்கிறார்கள். உரிமைகளை வழங்குவதற்கு நீங்கள் யார் என்று நான் கேட்கிறேன்.

அப்படி பூட்டுகளை உடைத்துக் கொண்டு வரும் பெண்களை இந்த சமூகம் எப்படிப் பார்க்கிறது? 'பஜாரிகள்; ஒழுக்கமற்றவள்; அடங்காப் பிடாரி' என்று குற்றம் சாட்டுகிறது. நான் சிறையிலிருந்து வெளியே வந்தவுடன், 'இனி இரவிலே தனியாகப் போகாதே; முன்பு போல் வெளியே போகாதே' என்று எச்சரிக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் கையிலே மிளகாய்த் தூளும் கத்தியையும் வைத்துக் கொண்டுதான் வெளியே வர முடிகிறது என்பதுதான் இந்த சமூகம்.

நீட் தேர்வு வேண்டாம் என்பதற்காக சட்டப் போராட்டம் நடத்தினார் அனிதா. அவர் என்ன சொன்னார்? "நாங்கள் ஏழைகள்; எப்படி எங்களால் கோச்சிங் சென்டர்களில் பணம் கட்டிப் படிக்க முடியும்?" என்று கேட்டார். தனியார் கல்வி நிறுவனங்களின் கல்வி வணிகம், ஏழைகளுக்கு எப்படி நீதி வழங்கும் என்பதுதான் அவர் கேட்ட கேள்விக்கான அர்த்தம்.

சமூகத்தில் ஆணாதிக்க அடக்குமுறை பெண்களின் உடல் சார்ந்துதான் இருக்கிறது. பெண்கள் மீது அவர்கள் கட்டமைக்கும் இரண்டு அடக்குமுறைகளில் ஒன்று வன்முறை; மற்றொன்று ஒழுங்கு. ஒழுக்கம் பெண்களுக்கு மட்டும் தான். அது ஆண்களுக்கு இல்லை. ஒரு ஆண் எத்தனை பெண்களோடும் போகலாம்! ஆனால் ஒருபெண் பல ஆண்களோடு பேசினாலோ பழகினாலோ சமூகம் அந்தப் பெண்ணின் ஒழுக்கத்தை சந்தேகிக்கிறது. பெண்ணின் கருப்பைக்குள்தான் ஜாதி இருக்கிறது. அந்த கருப்பைக்குள் உருவாகிற குழந்தை எந்த ஜாதி என்பதற்குத் தான் இங்கே வன்கொடுமைகள் நடக்கின்றன.

நான் என்ன குற்றம் செய்தேன்? கதிராமங்கலம், நெடுவாசலில் விவசாய நிலங்களை பாழடிக்கும் ஓ.என்.ஜி.சி. திட்டத்தை எதிர்த்துப் போராடும் மக்களின் பிரச்சினைகளை ஆதரித்து துண்டறிக்கைகளை வழங்கினேன். அதற்கான என் மீது குண்டர் சட்டம். நான் கூறுகிறேன், சிறையில் நான் மகிழ்ச்சியுடன் தான் இருந்தேன். இந்தச் சட்டங்கள் எனது போராட்ட உணர்வுகளை ஒருபோதும் ஒடுக்கிவிட முடியாது. நாங்கள் நடத்துகிற போராட்டங்கள் எங்களுக்கானது மட்டுமல்ல; சமூக உரிமைகளுக்கான போராட் டத்தில் நாங்கள் இறங்கி இருக்கிறோம்.

ஒரு பெண் தனக்கான உடலை யாருடன் பகிர்வது என்று முடிவு செய்யும் உரிமை பெண்ணுக்கு மட்டுமே உண்டு. அதேபோல் மக்களுக்கு உணவு வழங்கும் விவசாயி தனது நிலத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற உரிமை விவசாயிக்குத் தான் உண்டு.

சங்கர் கொலை செய்யப்பட்ட நேரத்தில் நான் கவுசல்யாவை பார்த்தேன். துணைவரை இழந்து நின்ற பெண்ணாக அப்போது இருந்தார். இப்போது இந்த மேடையில் நான் கவுசல்யா பேசிவிட்டு இறங்கியவுடன் அவரைப் பார்த்தேன். ஜாதிக்கு எதிராகப் போராடும் போராளியாக அவர் வளர்ந் திருக்கிறார். இப்படி அவர் வளர்த்தெடுக்கப் பட்டதற்கு எது காரணம்? எங்களுக்கு முன் செங்கொடி, அனிதா, அஜிதா என்ற பெண் போராளிகள் சமூகத்துக்காகப் போராடி மரணத்தைத் தழுவினார்கள். சென்னையைச் சார்ந்த மாவோயிச அமைப்பைச் சார்ந்த பெண் போராளி அஜிதாவை துப்பாக்கிச் குண்டுகளுக்கு பலியாக்கினார்கள். செங்கொடி, அனிதா, அஜிதா என்ற போராளிகள் மடிந்திருக்கலாம்; அவர்களின் கொள்கைகளை ஒரு போதும் அழித்துவிட முடியாது. அவர்களைத் தாங்கி நாங்கள் வந்திருக் கிறோம். நாங்களும் அழிக்கப்படலாம்; எங்களுக்குப் பிறகு இந்த சமுதாய விடுதலைத் தத்துவங்கள் அடுத்தடுத்துப் போராளிகளை வளர்த்தெடுக்கும்.

நான் சிறையிலிருந்தபோது தண்டகாருண்யா பகுதியில் பழங்குடி மக்கள் எப்படி இராணுவத்தால் வேட்டையாடப்பட்டார்கள் என்பதை உண்மை அறியும் குழு நேரில் சென்று சேகரித்த தகவல்களைக் கொண்ட ஒரு ஆங்கில நூலைப் படித்தேன். அங்கே போராடுகிறவர்கள் பழங்குடி மக்கள். தங்கள் நாட்டின் உரிமைகளை காக்கப் போராடுகிறார்கள். அருந்ததிராய் அது குறித்துக் கூறியதை நினைவு படுத்துகிறேன். தண்டகாரண்யா பகுதியில் ஆயுதமேந்திப் போராடும் போராளிகள் பழங்குடி மக்கள். அந்த பழங்குடி மக்களில் 90 சதவீதம் மாவோயிஸ்டுகள் என்றார். எனக்கு ஆயுதப் போராட்டத்தில் கருத்து மாறுபாடு உண்டு. பிரச்சினை அதுவல்ல; ஆனால் பழங்குடிப் பெண்கள் இராணுவத்தால் எப்படி நடத்தப்படுகிறார்கள்?

உரிமைகளுக்காகப் போராடுகிறவர்களை உடல்ரீதியாக அழிக்கிறார்கள் அல்லது சிறையிடைக்கிறார்கள். இராணுவத்தினர் கூட்டு பாலியல் வன்முறைக்கு உள்ளான 15 வயது பெண் கர்ப்பமுற்று இருக்கிறாள். 'முதல் 3 இராணுவத்தினர் வன்புணர்வு செய்த கொடுமைதான் எனக்கு நினைவில் இருக்கிறது. அதற்குப் பிறகு நான் மயங்கி விட்டேன். எத்தனை பேர் என்னை சீரழித்தார்கள் என்பது தெரியாது' என்று கூறியிருக்கிறார். கணவன் கண் முன்னே ஒரு பெண்ணைக் கூட்டு பால் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு பெண் ஒப்புதல் வாக்கு மூலம் தந்திருக்கிறார்.

ஈழத்திலே ஆயுதம் ஏந்தி பெண் புலிகள் போராடினார்கள். அவர்களும் இதே இராணுவ ஒடுக்குமுறையைத்தான் சந்தித்தார்கள். போராளி இசைப் பிரியாவை சிங்கள இராணுவ வெறி, சித்திரவதை செய்து சாகடித்தது.

அன்புத் தோழர்களே! நாங்கள் பேசும் அரசியல் எங்களுக்கானது அல்ல; சமூகத்துக்கானது. பெண் போராளிகளை அழித்துவிடலாம். எரிக்கப்பட்ட சாம்பல் மேட்டிலிருந்து ஃபீனிக்ஸ் பறவைகள் போல மீண்டும் மீண்டும் போராளிகள் வந்து கொண்டே இருப்பார்கள். ஜாதி ஒழிப்பே சமூக விடுதலை; ஜாதி ஒழிப்பே மனிதத்தை வளர்க்கும்; அந்த மனிதத்தை மதமாற்ற வாழ்க்கையே தரும்" என்றார் வளர்மதி.

## நெடுவாசலில் எச்.ராஜாவை விரட்டி அடித்தோம்!

'ஆனந்தவிகடன்' ஏட்டுக்கு வளர்மதி அளித்த பேட்டியி லிருந்து சில பகுதிகள்:



*2014-ம் ஆண்டு... சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே கடுமையான போராட்டம். மாணவர்களை அடித்து விரட்ட போலீஸைக் கல்லூரிக்குள் இறக்குகிறது நிர்வாகம். தடியடி நடத்துவதற்குக் கையிலிருந்த பிரம்பை இறுக்கிப் பிடித்தபடி, மாணவர்களை நோக்கி ஆயிரம் பூட்ஸ் கால்கள் நடந்துவர அவர்களுக்கு எதிரே நின்று ஒரே ஒரு மாணவி உரத்த குரலில் பேசுகிறார்; அவர்தான் வளர்மதி.*

"அது எப்போ இருந்து ஆரம்பிச்சதுன்னு கேட்டீங்கன்னா, ஜே.என்.யு மாணவர் முத்துக்கிருஷ்ணன் மரணம் அடைஞ்ச சமயத்துலதான். ரோஹித் வெமுலாவோட மரணத்திற்கு நீதிகேட்டுப் போராடினவர் முத்துக்கிருஷ்ணன். மாணவர்கள் சமூக நீதியை நோக்கி எழுச்சி அடையணும்னு தொடர்ந்து பேசிட்டு வந்தவர். அவர் தற்கொலை செஞ்சிருக்கவே மாட்டார்னு நாங்க நம்புறோம். அவர் உடல் சொந்த ஊருக்குக் கொண்டு வரப்பட்டபோது ஊர்த்தலைவர்கள், போலீஸ்காரர்கள் எல்லாம் சேர்ந்து முத்துக்கிருஷ்ணன் குடும்பத்துக்கு நிறைய அழுத்தம் கொடுத்து அவர் உடலை எரிக்கிற மனநிலைக்குக் கொண்டு வந்தாங்க. ஆனா, நாங்க விடலை. இந்த மரணத்துல மர்மம் இருக்கு; அவரை எரிக்கக் கூடாது, புதைக்கணும்னு சொன்னதோட இதுக்கு நீதி விசாரணை வேணும்னு போராடினோம். மறுநாள் பொன்.ராதாகிருஷ்ணன் வந்தப்போ அவர்மீது செருப்பு வீசிய சாலமனை அடிச்சு இழுத்துட்டுப் போனதோடு அவரை எந்த ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுப் போறாங்கனுகூட சொல்லலை. சட்டப்படி அவருக்குத் தண்டனை கொடுங்க. ஆனால், அவரைப்பற்றிய தகவல்களை மறைக்கிறதுக்கு உங்களுக்கு உரிமை இல்லைன்னு நான் அதிகமா போராடினேன். அப்போதான் பி.ஜே.பி. அதிகார மையங்களுக்கு என்னைப் பற்றிய தகவல்கள் போய் சேர்ந்துச்சுன்னு நினைக்கிறேன்" என நடந்த சம்பவங்களைக் கோர்வையாக அடுக்குகிறார் வளர்மதி.

"நான் இரண்டாவதாகக் கைது செய்யப்பட்டது நெடுவாசல் வேணாம்னு மக்கள்கிட்ட விழிப்பு உணர்வு செஞ்சப்போதான். ஜல்லிக்கட்டுன்னா எல்லோருக்கும் தெரியும். ஹைட்ரோ கார்பன் யாருக்கும் தெரியலை. அதனால அதன் ஆபத்துகளை மக்கள் மத்தியில் கொண்டு போகணும்னு புதுக்கோட்டை, சேலம், கோயம்புத்தூர் முழுக்க, பஸ் ஸ்டாண்ட், உழவர்கள் மத்தியில், இரயிலுக்குள்ளே பறை அடிச்சுனு தொடர்ந்து பிரச்சாரம் செய்தோம்.

'நக்சலைட்டுகள்தான் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை எதிர்ப்பாங்க. நெடுவாசலில் போராடுறவங்கள்லாம் நக்சலைட்டுகள்தான்'னு ஹெச்.ராஜா சொன்னாரு. அப்படிச் சொன்ன ஒருத்தர் ஏன் நெடுவாசல் வராருன்னு ஒரு கேள்வி எங்களுக்கு வந்தது. அங்கே போனோம். எங்களை உள்ளேவிடாம தடுத்தாங்க. ரொம்பக் குள்ளமா இருக்கிறது நல்லதுன்னு எனக்கு அப்போதான் தோணுச்சு. தடுத்தவங்களை மீறி அவங்களுக்குத் தெரியாம சந்து பொந்துல நுழைஞ்சி ஹெச்.ராஜா பேசிட்டு இருந்த இடத்துக்கு ரொம்பப் பக்கத்துல போயி அவர் பேசினதைக் கேட்டுட்டு இருந்த மக்களைப் பார்த்துக் கத்திச் சொன்னேன். 'நெடுவாசல் திட்டத்தை எதிர்த்துப் போராடுறவங்களை நக்சலைட்னு சொன்ன இவரை இங்கே பேச விடுறீங்க. மக்களுக்காக வந்த மாணவர்கள் எங்களை உள்ளே விட மாட்றாங்க. உங்களுக்காக வேற வேற ஊர்கள்ல இருந்தெல்லாம் வந்து இருக்கோம். நீங்க எல்லாம் எங்ககூட துணைக்கு இருக்கணும்'னு நான் சொல்லி 'ஹெச்.ராஜா வெளியேறு... ஹெச்.ராஜா வெளியேறு'ன்னு கோஷமிட்டதும் ஏற்கெனவே கொந்தளிப்புல இருந்த மக்கள் அப்படியே எழுந்து நான் இருக்கிற பக்கம்வந்து அவரை வெளியேறச் சொல்லிட்டாங்க. ஹெச்.ராஜா அவமானத்துடன் வெளியேறினார். அப்போ இருந்து சரியா ஒரு மாசம் அடுத்தகட்ட நெடுவாசல் போராட்டத்துக்காகப் பிரசாரம் செய்தபடியே ரயில்ல நாங்க போயிட்டு இருக்கிறப்போ குளித்தலையில் என்னையும் என் தோழி சுவாதியையும் கைது பண்ணினாங்க. அப்போதான் திருச்சி மத்தியச் சிறையில் 36 நாள்கள் சிறை வைக்கப்பட்டு எங்க வாழ்நாளோட உச்சகட்டக் கொடுமைகளையும், அவமானங்களையும் அங்கே சந்திச்சேன்" என்று வளர்மதி தனக்கு நேர்ந்த அனுபவங்களைச் சொல்லிக் கொண்டே போக, அவர் அம்மா கண்களைத் துடைத்தபடியே அங்கிருந்து எழுந்து போனார்.

...."சிறையிலிருந்து வெளியே வர்றப்போ கவுரி லங்கேஷ் டெத் நியூஸ் படிச்சுட்டுதான் வெளியே வந்தேன். பக்குன்னு இருந்துச்சு. ஆனா, பயமா இல்லை. இது எனக்கும் நடக்கும்னு தோணுது. இதுக்கெல்லாம் பயந்து வீட்டுக்குள்ள உட்கார்ந்து இருக்க முடியாது. இப்போதான் ரொம்ப ஸ்ட்ராங்காகி இருக்கேன். நல்ல நல்ல தலைவர்களுக்கு எல்லாம் வயசாகிட்டு வர்றதால பாசிஸ சக்திகளுக்கு குளிர்விட்டுப் போகுது. என்னைப்போல இருபத்தி மூணு, இருபத்தி நாலு வயசுள்ள பசங்க இவங்களை எதிர்க்க ஆரம்பிச்சா என்ன பண்ணுவாங்க?

DATE OF PUBLICATION - EVERY THURSDAY  TAMIL WEEKLY  REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM  REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கழக தலைவர் கொடியசைத்து துவக்கி வைத்தார்

# திருப்பூரை உலுக்கிய பெரியார் பிறந்தாள் வாகன பேரணி

பெரியாரின் 139ஆவது பிறந்த நாள் விழா செப்.17 அன்று திருப்பூர் மாவட்டத்தின் சார்பாக பெரியார் கூட்டமைப்பின் ஊர்வலம் மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து இரயில் நிலையம் பெரியார் சிலை வரை 3 மணி நேரம் கொட்டும் மழையில் நடைபெற்றது

02.10.2017 அன்று காலை 10 மணிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி பெரியார் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கழக கொடியினை ஏற்றி சிறப்புரையாற்றினார். உடன் கழக பொருளாளர் துரைசாமி, மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் மாநகர் பொறுப்பாளர்களோடு, திருப்பூர், பொள்ளாச்சி, கோவை, நாமக்கல் மாவட்ட தோழர்களும் இருந்தனர்.

காலையில் இரயில் நிலையம் முன் அமைந்துள்ள பெரியார் சிலை அருகில் தோழர்கள் ஒன்று கூடினர். பறை முழக்கம் இசைக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இருசக்கர வாகன பேரணியையும், 24 இடங்களில் கழக கொடியேற்றும் விழாவையும் கழகக் கொடியசைத்து தலைவர் கொளத்தூர் மணி வாகன ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். பறை முழக்கங்களோடு விளம்பர பதாகைகள், கழக கொடியோடு ஈச்சர் வாகனம் முன் செல்ல, அதனைத் தொடர்ந்து ஒலிபெருக்கி வாகனத்தில் பெரியார் பிறந்தநாள் கொள்கை முழக்கங்களை பொள்ளாச்சி மணிமொழி, சங்கீதா ஆகியோர் முழங்கி செல்ல அதனை தொடர்ந்து இரு சக்கர வாகனங்களில் கழகக் கொடியோடு தோழர்கள் அணி வகுத்து சென்றனர்.

பின் இருக்கையில் அமர்ந்திருந்த தோழர்கள் பல்வேறு அச்சிட்ட பகுத்தறிவு பதாகைகளை கையில் ஏந்தி சென்றனர். மதக்கலவரத்தை தூண்டக் கூடிய வகையில் இந்து முன்னணியினர் விநாயகர் ஊர்வலத்திற்கு திருப்பூர் எங்கும் எழுதிய சுவரெழுத்துகளுக்கு பதிலடி தரும் வகையில் வாசகங்கள் இருந்தன.

கழகத்தலைவர் இரயில்நிலையம் மட்டுமல்லாமல், இராயபுரம், கல்லம்பாளையம், வள்ளுவர் தெரு, இரங்கநாதபுரம், வள்ளுவர் நகர், கண்ணகி நகர், மாஸ்கோ நகர், பெரியார் காலனி, அனுப்பர் பாளையம், அம்மாபாளையம், 15 வேலம்பாளையம், டிடிபி மில் சாலை ஆகிய இடங்களில் கொடியேற்றினார்.

தோழர்கள் அனைவருக்கும் மாட்டுக்கறி பிரியாணி மதிய உணவாக தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி இல்லத்தில் வழங்கப்பட்டது.

உணவு இடைவேளைக்கு பின் ஆத்துப்பாளையம், பெருமாநல்லூர் ஆகிய இடங்களில் கழகத் தலைவரும், கணக்கம்பாளையம் பகுதியில் மகேந்திரனும் (போயம்பாளையம் பகுதியில் தமிழ்நாடு மக்கள் விடுதலைக் கட்சியின் தோழர்கள் உற்சாக வரவேற்பு அளித்து தோழர்களுக்கு குளிர்பானங்களை வழங்கினர்), போயம்பாளையம் தமிழ் செல்வியும், புதிய பேருந்து நிறுத்தத்தில் கோமதியும், சந்தை பேட்டை பகுதியில் தனகோபாலும், முத்தையன் கோவில் பகுதியில் மாதவனும், கொளத்துப்பாளையம் பகுதியில் சரசுவதியும், முருகம் பாளையம், இடுவம்பாளையம் பகுதியில் இராமசாமியும், வீரபாண்டி பகுதியில் இராசசிங்கமும் கழகக் கொடியினை ஏற்றினார்கள்.

நகரின் மையப் பகுதியில் பதாகைகள் வைக்கப் பட்டிருந்தன. நகரம் முழுவதும் 100 சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. 1000 துண்டு அறிக்கைகள் மக்களிடம் விநியோகிக் கப்பட்டது. இந்த பேரணிக்கு மாவட்ட தலைவர் முகில்ராசு வழி நடத்தி செல்ல, தோழர்கள் சங்கீதா, அசுவிதா, கனல்மதி, சரண்யா, முத்துலட்சுமி, மாலதி, சரசுவதி, பிரியங்கா, தேன்மொழி, பார்வதி முன்னிலை வகித்தனர்.

கொடியேற்றும் இடங்களில் எல்லாம் 5 நிமிடத்திற்கு குறையாமல், பெரியாரிய கருத்துகளை சிற்றுரையாக வழங்கினர். நிகழ்வில் மாவட்ட செயலாளர் நீதிராசன், மாநகர் தலைவர் தனபால், நகர செயலாளர் மாதவன், மாநகர் அமைப்பாளர் முத்து, தெற்கு மாவட்ட அமைப்பாளர் இராமசாமி, வடக்கு மாவட்ட அமைப்பாளர் கருணாநிதி, மாஸ்கோ நகர் கோமதி, பார்வதி, கதிர்முகிலன், தேன்மொழி ஆகியோர் கலந்துகொண்டு பேரணியை எழுச்சியொடு நடத்தி சென்றனர். சங்கீதா வாழ்த்தொலியோடு, பெரியார் கருத்துகளை ஒலி பெருக்கியில் முன்னெடுத்து வழி யெங்கும் களைப்பில்லாமல் முழங்கியதை கண்ணுற்ற தலைவர், ஆத்துப்பாளையம் பகுதியில் கழகத்தின் பிரச்சார பீரங்கி என்றழைத்து உரையாற்ற வேண்டுகோள் விடுத்தார். தனகோபால், கிருஷ்ணன் நிகழ்ச்சி முழுவதும் புகைப்படங்களையும் காணொளிகளையும் சிறப்பாக எடுத்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் வீரபாண்டி பகுதியில் கொடியேற்றி பின் 15 நிமிடங்களுக்கும் அதிகமாக பறையிசைத்து தோழர்கள் ஆடி தங்கள் கொண்டாட்டத்தினை வெளிப்படுத்தினர். அதன் பின் தெருமுனைக்கூட்டம் போல மக்கள் கவனிக்க ஆரம்பித்தவுடன்

“இழந்துவரும் உரிமைகளை காப்போம், தமிழகத்தின் தனித்தன்மை காப்போம்” என்று பல்வேறு தலைப்புகளில் பொள்ளாச்சி வெள்ளியங்கிரி, மணிமொழி, இணையதள பொறுப்பாளர் விஜய் குமார், சங்கீதா, மாவட்ட செயலாளர் நீதிராசன், மாவட்ட தலைவர் முகில்ராசு, தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் சிவகாமி, கழகப் பொருளாளர் துரைசாமி கருத்துரை ஆற்றினர். மாதவன் நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்ச்சி சிறப்பிக்க கோவையில் இருந்து நிர்மல்குமார், சூலூர் பன்னீர் செல்வம், பொள்ளாச்சி அரிதாசு, ஆனந், விக்கி, திருச்செங்கோட்டில் இருந்து மனோஜ் ஆகியோர் வந்திருந்தனர்.

காலை 10 மணிக்கு தொடங்கிய நிகழ்ச்சி அயராது, தோழர்கள் சோர்வில்லாமல் இரவு 9 மணிவரை நடந்தது. பெரியார் பிறந்தநாள் அன்று கூட்டமைப்பு சார்பில் ஊர்வலம் சென்றபோது தோழர்கள் மழையினை பொருட்படுத்தாமல் வந்தது போல், இன்று இரு சக்கர வாகன பேரணியில் கடும்வெயிலினை பொருட் கொள்ளாமல் எழுச்சியோடு பெரியாரிய கருத்துகளை மக்கள் முன்வைத்தனர்.

**செய்தி முகில்ராசு / விஜய்குமார்**

# கழகப் பொறுப்பாளர்கள் மாவட்ட வாரியாக தோழர்களை சந்திக்கிறார்கள்

தலைமைக் கழக சார்பில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன், சூலூர் பன்னீர் செல்வம் ஆகியோர் மாவட்ட வாரியாக கழகத் தோழர்களை கீழ்க்கண்ட பயணத் திட்டப்படி சந்திக்கிறார்கள். ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ சந்தா திரட்டுதல், கழகக் கட்டமைப்பு நிதி திரட்டுதல் குறித்து கழகத் தோழர்களிடம் கலந்து பேசுகிறார்கள்.

**சுற்றுப் பயண விவரம்:**

26.10.2017 - காலை 10.00 - ஈரோடு வடக்கு - ஈரோடு
மாலை 5.00 - ஈரோடு தெற்கு - கோபி

27.10.2017 - காலை 10.00 - சேலம் மேற்கு - மேட்டூர்.
மாலை 5.00 - கிருஷ்ணகிரி- கிருஷ்ணகிரி.

28.10.2017 - காலை 10.00 - தருமபுரி - தருமபுரி.
மாலை 5.00 - சேலம் கிழக்கு - சேலம்.

29.10.2017 - காலை 10.00 - நாமக்கல்-திருச்செங்கோடு.
மாலை 5.00 - திருப்பூர் - திருப்பூர்.

03.11.2017 - காலை 10.00 - கோவை - கோவை
மாலை 5.00 - கோவை புறநகர் - பொள்ளாச்சி.

04.11.2017 - காலை 10.00 - திண்டுக்கல் - பழனி.
மாலை 5.00 - பெரம்பலூர்-பெரம்பலூர்.
மாலை 7.00 - திருச்சி - திருச்சி.

05.11.2017 - காலை 10.00 - விழுப்புரம் - சங்கராபுரம்
மாலை 6.00 - வேலூர் - குடியாத்தம்.
மாலை 7.00 - சிவகங்கை - காளையார் கோவில்.

10.11.2017 - காலை 10.00 - கரூர் - புலியூர்.
மாலை 4.00 - மதுரை - மதுரை.

11.11.2017 - காலை 10.00 - தஞ்சை - பேராவூரணி.
மாலை 5.00 - திருவாரூர் - மன்னார்குடி.

12.11.2017 - காலை 10.00 - நாகை - மயிலாடுதுறை.
மாலை 5.00 - கடலூர் - விருதாச்சலம்.

18.11.2017 - காலை 10.00 - விருதுநகர் - விருதுநகர்.
மாலை 5.00 - நெல்லை - பாவூர்சத்திரம்.

19.11.2017 - காலை 10.00 - குமரி - நாகர் கோவில்.
மாலை 5.00 - தூத்துக்குடி - தூத்துக்குடி.

தோழர்கள் ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

**கொளத்தூர் மணி**
**தலைவர்**

**வெளி வந்துவிட்டது!**
**‘நிமிர்வோம்’**
**அக்டோபர் இதழ்**

- பெரியார் காந்தியுடன் நடத்திய நேரடி விவாதம்
- நீட் மருத்துவக் கல்வி தரத்தை உயர்த்தாது
- பெரியாருக்கு எதிராக அம்பேத்கரை நிறுத்தும் பார்ப்பனியம்!
- கடும் சரிவில் இந்திய பொருளாதாரம் முதலீட்டாளர்கள் ஓட்டம்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...




தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு : நிர்வாகி,
‘நிமிர்வோம்’ மாத இதழ்,
95, டாக்டர் நடேசன் சாலை,
அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர்,
சென்னை – 600 004.
தொலைபேசி எண் :
044 24980745 / 7299230363
www.dvkperiyar.com /
nimirvomdvk@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted: 26th October 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN